# சிற்பி மாயன்

❊

— ராஜம் —

❊

வெளியீடு :

ராஜம் பப்ளிகேஷன்ஸ் : சென்னை - 1.

முதற் பதிப்பு: பிப்ரவரி, 1955

உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. **0-12-0**

**ஆசிரியரின் பிற நூல்கள் :**

புத்தர் ஜாதகக் கதைகள்

நல்ல மனிதர் (அச்சில்)

**விற்பனை உரிமை :**

**பாரி நிலையம்**

59, பிராட்வே, சென்னை-1.

சாது அச்சுக்கூடம், சென்னை-14

# முன்னுரை

1950 - '51, அந்த வாக்கில் - அம்புலிமாமாவின் ஆசிரியராக - அம்புலியாக - இருந்த போது - சிற்பி மாயன் - அழியாச் சின்னம் - இந்த இரண்டு கதைகள், புனைப் பெயரில் - பத்திரிகைகளில் - வெளிவந்தன. புத்தக வடிவில் அவைகளைச் செம்மைப் படுத்தி இப்பொழுது தங்க ரதத்துடன் தந்திருக்கிறேன்.

—ராஜம்

# பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. சிற்பி மாயன் | .... | 5 |
| 2. அழியாச் சின்னம் | .... | 21 |
| 3. தங்க ரதம் | .... | 27 |




பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு—

"மாளவ நாட்டிலுள்ள ஏரியின் மத்தியில் - யாரும் கண்டும் கேட்டுமிராத அபூர்வ ஆலயம் ஒன்றை - ஐந்து வருஷங்களில் - கட்டி முடிக்கவேண்டும். வெற்றிகரமாக முடித்துத் தருபவர்களுக்கு ஒரு லட்சம் பொன் தரப்படும். குறிப்பிட்ட தேதிக்குள் கோயிலைப் பூர்த்தி செய்யாவிட்டால், அவர்கள் தலையைச் சீவிக் கோட்டை வாயிலில் கட்டப்படும்" - என்ற இந்த அறிக்கையைக் கேட்டு நூற்றுக்கணக்கான சிற்பிகள் பின் வாங்கினார்கள். துணிந்தவர்கள் உயிரை இழந்தார்கள்.

இந்த நிலையில்—

மாயன் என்ற ஊமைக்கு இந்த அறிக்கை எட்டியது. மாயன் சாதாரண ஆளல்ல. மகா சிற்பி. அவன் வேலைத்

திறனைப் பரீட்சித்துப் பார்க்கவேண்டுமென்றால், அது மகாராஜாக்களுக்குத்தான் தகும். அவ்வளவு பெரிய வேலைக்காரன் !

ஆனால்—

அவன் தரித்திர தேவதையால் பீடிக்கப்பட்டு, ஒரு காட்டில் வாழ் நாளைக் கழித்துவந்தான். நல்ல காலத்தை எதிர்பார்த்திருந்த அவனுக்கு இந்தச் செய்தி எவ்வளவோ ஆனந்தத்தை அளித்தது. உடனே அவன் மாளவத்திற்குப் புறப்பட்டான். அரசனைக் கண்டு, எண்ணத்தை எழுத்தின் மூலம் வெளியிட்டான். ஒரு சில வேலைப்பாடுகளைச் செய்து காண்பித்தான்.

மாயன் வேலைப்பாடுகளைக் கண்டு அரசன் அதிசயித்தான். எண்ணம் நிறைவேறி விட்டதாக எண்ணிப் புளகாங்கிதம் அடைந்தான்.

அதன் பலன்—

கோயில் கட்டுவதற்கு வேண்டிய சாமான்கள் யாவும் நாலாபக்கங்களிலிருந்து வந்து சேர்ந்தன. ஆயிரக்கணக்கான நிபுணர்கள் வந்து சேர்ந்தார்கள். பதினாயிரக் கணக்கான கூலிகள் வந்து கூடினார்கள்.

கோயில், மாயன் தலைமையில் கொஞ்சம் கொஞ்சமாக உருவாகத் தொடங்கியது.

ஆண்டுகள் ஐந்து முடிந்தன. கோயில் திருப்பணி, பூர்த்தியாகியது.

ஒருநாள்—

அரசன் ஏரிக்கு வந்து கோயிலைப் பார்வையிட்டான். மகாசிற்பி மாயனின் கைத் திறமையில் அமைந்த எல்லா சிற்பங்களையும் சித்திரங்களையும் பார்த்து உவகையும் பெருமையும் அடைந்தான். எண்ணத்தை நிறைவேற்றி வைத்த மாயனுக்கு ஒரு லட்சம் பொன் பரிசளித்தான். ஆஸ்தான சிற்பியாக ஆக்கிக்கொண்டான். ஆனால் - அவனைக் கடவுள் ஊமையாகப் படைத்ததற்கு அவன் வருந்தாமலில்லை! என்ன செய்வது ?—

மாயன் கட்டி முடித்த அதிசயக் கோயிலைப் பார்க்க மக்கள் வெளிநாடுகளிலிருந்துகூட வர ஆரம்பித்தார்கள்.

அதனால்—

மாளவத்தின் பெயரும் மன்னனின் புகழும் வானோங்கியது. அரசன் தான் செய்த காரியத்திற்குப் பெரிதும் சந்தோஷப்பட்டான்.

ஒருநாள்—

மாயன் படைப்பில் ஊமையல்ல வென்றும் ஏதோ காரணமாகத்தான் அப்படி இருக்கிறான் என்றும் கோயிலைப் பார்க்க வந்தவர்களில் சிலர் - கலிங்க நாட்டார் - பேசிக்கொண்டதை ஒற்றர் கள் சொல்லக் கேட்டு, அரசன் ஆச் சரியமடைந்தான். எப்படியும் இதன் மர்மத்தை அறிந்து மாயனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய எண்ணினான். ஆஸ் தான விதூஷகனைக்கொண்டு பேசவைக்க முயன்றான். முடியவில்லை! மணிமந்திர தந்திரங்களைக் கையாண்டு பார்த்தான், பலனில்லை!

கடைசியில்—

"யார் மாளவ நாட்டு ஆஸ்தான சிற்பியைப் பேச வைக்கிறார்களோ அவர் களுக்கு நிறைய பரிசுகள் வழங்கப்படும்" என்று எங்கும் பறை சாற்றினான்.

இந்த அறிக்கையைக் கேட்டு ஆயிரக் கணக்கானவர்கள் வந்தார்கள். பயன்? மாயனைப் பேசவைக்க முடியாமல் திணறி னார்கள். இது அரசனுக்குக் கவலையாக

இந்த நிலையில்—

ஒருநாள்—

திடீரென்று ஒரு பெண் அரசசபைக் குள் நுழைந்தாள். அவையோர் எழுந்து

நின்று அவனுக்கு மரியாதை செய்தார்கள். அரசன் அவளை வரவேற்று, தக்க ஆசனம் தந்து உட்காரச் சொன்னான்.

அவள் உட்காரவில்லை. "மகாராஜா! அனுமதி கொடுங்கள். உங்கள் ஆஸ்தான சிற்பியை நான் பேசவைக்கிறேன்" என்றாள்.

சபையோர் ஆச்சரியமடைந்தார்கள்.

மாயன் முகத்தில் சந்தோஷக்குறி அவிழ்ந்து மறைந்தது.

அரசன் அனுமதி கொடுத்தான். அவள், அவனை - "பேசுங்கள்" என்றாள். மாயன் பேசவில்லை! மீண்டும் அவள், "பேசுங்கள்" என்றாள். அவன் வாய்த் திறக்கவில்லை!

அவள் கண் கலங்கினாள். "கொடுத்த தண்டனையை மறந்து விடுங்கள். பணத்திற்கும் பரிசுக்கும் ஆசைப்பட்டு நான் இங்கு வரவில்லை. என்னை மன்னித்து விடுங்கள். பேசுங்கள்...பேசுங்கள்...." என்று அவன் காலைப் பிடித்துக் கொண்டாள்.

மாயன் உள்ளம் கசிந்தது. உதடுகள் துடித்தன. "எழுந்திரு" என்றான். ஈனஸ்வரம் அவன் குரலில் ஒலித்தது.

சபையோர் மாயன் பேசியதைக் கேட்டு, ஏதோ ஒரு புது உலகத்தைக்

கண்டு பிடித்து விட்டதாக அறிசயித் தார்கள்.

அப்பொழுது மாயன், "மகா ராஜா !... மன்னியுங்கள் ! இத்தனை நாள் தங்களிடம் பேசாமல் இருந்ததற்குக் காரணம் இருக்கிறது" என்று தொடர்ந் தான்.

"சைனிய பலம் வலுத்த கலிங்க நாட்டரசன் திடீரென்று பாடலிபுரத்தின் மேல் படையெடுத்து அரசன் மகேந்திர பூபதியின் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். ஆனால், அவனுக்கு நிம்மதி இல்லாமல் போயிற்று. காரணம்: நாட்டி லுள்ள மக்கள் மகேந்திரபூபதியின் நற் குணங்களையும் சுதாமனுடைய துர்க் குணங்களையும் அறிந்திருந்தார்கள். ஆகை யால் - சுதாமன் எப்படியும் மகேந்திர பூபதியைக் கொல்ல எண்ணினான்.

ஆனால்—

மகேந்திரபூபதி சுதாமனிடம் தோல்வி அடைந்ததும் அவர் ஆஸ்தான சிற்பி யான நான் அவருடன் ராஜ்ஜியத்தைக் கடந்து மாறுவேஷத்தில் காடுகளில் நாட் களைக் கழித்துவந்தேன். அப்பொழுது - நாங்கள் இருந்த காடு, கலிங்கநாட்டரச னுக்குச் சொந்தமான காடு.

ஒருநாள் மாலை—

நானும் மகேந்திரபூபதியும் எதிர் காலத்தைப் பற்றி - அந்தக் காட்டில் - பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது- எங்களுக்குப் பக்கத்தில் குதிரைகளின் குளம்படிச் சப்தம் கேட்டது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பிரிந்தோம். நான் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு மரத்தின் மேல் பதுங்கிக் கொண்டேன். பயத்தால் என் உடல் ஆடியது.

கொஞ்ச நேரம் கழித்து—

நான் இருந்த மரத்திற்குக் கொஞ்ச தூரத்தில் கலிங்க நாட்டுப் போர்வீரர்கள் சிலர் வந்து இறங்கினார்கள். அவர்களில் இருவர் மரத்திற்குப் பக்கத்திலிருந்த பாறையை உருட்டி ஒரு பக்கமாகத் தள்ளினார்கள். கீழே-சுரங்கவழி ஒன்று காணப்பட்டது!. அவர்கள் தங்கள் குதிரைகளின்மேல் கொண்டுவந்த கட்டில், சாப்பாடு, துணிவகைகளைச் சுமந்து கொண்டு சுரங்கத்திற்குள் நுழைந்தார்கள். கடைசியில், அவர்களின் தலைவன் வாய்க்குத் துணியை அடைத்துவிட்டிருந்த ஒரு பெண்ணை இழுத்துக்கொண்டு உள்ளே போனான்.

நெடுநேரத்திற்குப் பிறகு—

அவர்கள் வெளியே வந்தார்கள். பாறையை முன் போல் மூடிவிட்டுக்

குதிரைகளின் மேலேறிப் போய்விட்டார்கள்.

இதையெல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த நான் மன மிரங்கினேன். மரமிறங்கிவந்து பாறையை நெட்டினேன். படிகள் தெரிந்தன. நான் அந்தப் படிகளின் வழியாகக் கீழே இறங் கிப் போனேன். கடைசியில் ஓர் அறையை அடைந்தேன். அந்த அறையில் அந்தப் பெண் அழுதுகொண்டிருந்தாள். தைரியம் சொன்னேன். காப்பாற்றுவதாக வாக் களித்தேன்.

அவள் நன்றியோடு என்னைப் பார்த் தாள். "நான் கலிங்க நாட்டு அந்தப் புரத் தாதி. என்னை இங்கு கொண்டு வந்தவன் சுதாமனின் மந்திரி மார்த்தாண் டன். அவன் என்னைக் கலியாணம் செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத் தினான். நான் மறுத்தேன். அதனால் கோபம்கொண்ட அவன் என்னை இப்படி அடைத்து வைத்துக் கலியாணம் செய்து கொள்ளப்பார்க்கிறான். தயவு செய்து என்னை இந்த அபாயத்திலிருந்து காப் பாற்றுங்கள். உங்களுக்குக் கோடி புண் ணியமுண்டு. வேண்டுமானால் உங்களை மணந்து கொள்கிறேன்" என்று கதறி னாள்.

உடனே எனக்கு ஒரு யோசனை தோன்றியது. இவளைச் சுரங்கத்திலிருந்து காப்பாற்றி இவள் நட்பைப்பெற்றால் அரண்மனையில் நடக்கும் அந்தரங்க விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாமென்று எண்ணினேன். அவள் விருப்பத்திற்குச் சம்மதித்தேன்.

ஆனால் அவள் - "ஒரு நிபந்தனை : இன்று முதல் நீங்கள் ஏழு வருஷங்கள் வரை யாரிடமும் பேசக்கூடாது. சம்மதித்தால் உங்களை - நீங்கள் எங்கிருந்தாலும் - எவ்வளவு காலமானாலும்-மணந்து கொள்கிறேன்" என்றாள். நான் ஒப்புக் கொண்டேன்.

நாங்கள் சுரங்கத்தை விட்டுவெளியே வரும்பொழுது - நன்றாக இருட்டி விட்டிருந்தது. நான் அவள் விருப்பப்படி அந்தப்புரத்திற்குச் சமீபத்திலிருந்த அவள் வீட்டில் அவளை விட்டு விட்டு, காட்டிற்கு வந்து பார்த்தேன். அரசரைக் காணோம். திடுக்கிட்டு அங்குமிங்குமாக அலைந்து காடு பூராவும் தேடினேன். பயனில்லை. யாரையாவது கேட்டுப் பார்க்கலாமென்றால் யாரைக் கேட்பது ? அப்படி யாராவது கிடைத்தாலும் எப்படிக் கேட்பது ! நான்தான் பேசமாட்டேன் என்று சபதம் செய்துவிட்டேனே ? - என் மூளை குழம்பியது.

உடனே என்னைப் பல சந்தேகங்கள் வந்து சூழ்ந்து கொண்டன. ஒரு வேளை - யாராவது அரசரை அடையாளம் கண்டு கொண்டு கைது செய்து விட்டிருப்பார்களோ என்று எண்ணி மனம் பதறினேன். தாதியை விசாரித்தால் ஏதாகிலும் தெரியலாம் என்றெண்ணி ஒற்றர்கள் கண்களில் படாமல் அவள் வீட்டை அடைந்து பார்த்தேன். என்ன ஏமாற்றம்! அவள் வீடு பூட்டிக்கிடந்தது. அப்பொழுதுதான் அவள் பெயரைத் தெரிந்துகொள்ளாமல் போனது நினைவிற்கு வந்து என்னை வாட்டியது. ஒரு வேளை மார்த்தாண்டனுக்குப் பயந்து அவள் வேறு எங்கேயாவது போய்விட்டிருப்பாளோ என்று நினைத்தேன். மறுகணம் - நான் மதியிழந்தவனானேன். பைத்தியக்காரனைப் போல் கால்போன போக்கெல்லாம் திரிந்தேன்.

அப்பொழுது—

மக்கள் பேசிக்கொண்டதிலிருந்து காட்டிற்கு வேட்டையாடச் சென்றிருந்த மார்த்தாண்டன் தற்செயலாக அங்கே காணப்பட்ட மகேந்திரபூபதியைக் கைது செய்துவிட்டதாக அறிந்தேன். என் எண்ணம் உறுதி பெற்றதை எண்ணி உள்ளம் குமுறினேன்.

இந்தச் சமயத்தில்தான் - தாங்கள் விட்ட அறிக்கையைக் கேட்டு ஒருவாறு மனம் தேறினேன். எப்படியும் கோயிலைக் கட்டிக்கொடுத்து தங்களின் நட்பைப் பெற்று, கலிங்க அரசனைப் பழிவாங்க உறுதி கொண்டேன். அந்த நல்ல சமயம் இப்பொழுது வாய்த்திருக்கிறது! மகா ராஜா! அவள் - அவள் - என்று சொல்லி வந்தேனே அவள் யார் தெரியுமா? இதோ நிற்கிறாளே - இவள்தான் !" என்று மாயன் நிறுத்தினான்.

சபையோர் ஆச்சரியக் கடலில் மூழ்கினார்கள்.

அப்பொழுது—

" மகாராஜா !.... நான் சொல்வதை யும் கொஞ்சம் கேளுங்கள். தவறிருந் தால், என்னைத் தண்டியுங்கள். தயங்க வேண்டாம் ! நான் சுதாமனின் மகள் வானதி என்று தெரிந்தால் எங்கே இவர் என்னைப்பற்றி மற்றவர்களிடம் வெளியிட்டு, என் அப்பாவிற்குத் தீராத அவமானத்தை உண்டாக்கி விடுவாரோ என்று பயந்து உண்மையை மறைத்து, அவரைக் கலியாணம் செய்துகொள்வ தாகச் சொல்லி, நிபந்தனை வைத்தேன். காரணம் : இவர் என்னைப்பற்றி வெளி

யில் யாரிடமும் சொல்லக்கூடாது என் பதுதான் " என்ருள், அவள் - வானதி !

அதே சமயம்—

" என் அரசரின் மேல் போர் தொடுத்த அரக்கனின் மகளையா நான் காப்பாற்றினேன் " என்று பதறினுன், மாயன்.

வானதி தொடர்ந்தாள் : " என் அப்பா உண்மையில் நல்லவர். அவர் மந்திரி மார்த்தாண்டன் துர்ப்போதனை யால் மனம் மாறி பாடலிபுரத்தின் மேல் படையெடுத்தார்.

அது சமயம்—

நான் அரண்மனை மாளிகையில் தங்கி இருந்தேன். அப்பொழுது ஒருநாள் திடீ ரென்று மந்திரியின் ஏவலாளிகள் என் வாய்க்குத் துணியை அடைத்து, என்னைக் காட்டிற்கு - ரகசிய சிறைக்கு - கொண்டு போனர்கள்.

பிறகு—

மார்த்தாண்டன் என்னிடம் வந்து அவனை மணந்து கொள்ளும்படி வற் புறுத்தினுன். நான் மறுத்தேன். அத ஞல் கோபமடைந்த அவன் என்மேல் சீறி விழுந்தான். " இன்னும்

நாளைக்குள் உன் அப்பாவின் உயிரை எமபுரிக்கு அனுப்பிவிட்டு - மக்களுக்கு - நீ காணாத துக்கத்தால் திடீர் மரண மடைந்தார் என்று பறைசாற்றி, நாட்டைக் கைப்பற்றிக் கொள்வேன். பிறகு அடிமையான நீ என் இஷ்டப்படி ஆட வேண்டியதுதான்'' என்று கர்ஜித்தான்.

அவன் போன கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இவர் வந்தார். அப்பொழுது இவர்தான் மகாசிற்பி என்று எனக்குத் தெரியாது.

தெய்வம்போல் என்னைக் காப்பாற்ற வந்த - ஏன் - என் அப்பாவைக் காப்பாற்ற வந்த - இல்லையில்லை - நாட்டு மக்களை நச்சுப்பாம்பு மார்த்தாண்டனிட மிருந்து காப்பாற்ற வந்த இவருக்கு ஏற்ற கைம்மாறு, நான் அவரை மணந்துகொள்வதுதான் என்று அந்தக் கணமே முடிவிற்கு வந்தேன். அதனால்தான் நான் அவரை மணந்து கொள்வதாகச் சொன்னேன்.

பிறகு நான் அந்தப்புரத்திற்குச் சமீபத்திலிருந்த என் உயிர்த் தோழியின் வீட்டை அடைந்து நடந்ததைச் சொல்லி, அப்பாவிற்குச் செய்தியை எட்டச் செய்தேன்.

கண்ணும்கருத்துமாக வளர்த்த ஒரே மகளைக் காணமல் கண்ணீர் வடித்துக்

கொண்டிருந்த அவர் என்னை வந்து அந்தப்புரத்திற்கு அழைத்துக்கொண்டு போனார். தனியாக அந்த வீட்டில் பாட்டியுடன் வசித்து வந்த அவளையும், அவள் பாட்டியையும் உடனே அந்தப்புரத்திற்கு வந்து என்னுடன் இருக்க ஏற்பாடு செய்தார்.

நான் அவரிடம் நடந்ததை ஒன்று விடாமல் சொன்னேன். அவர் கனவுலகத்திலிருந்து நனவு வந்தவரைப் போலானார்.

மறுகணம்—

மந்திரி செய்த சூழ்ச்சியை உணர்ந்து உடனே அவனைக் கைது செய்து தக்க தண்டனை விதித்தார். பாடலிபுர அரசரை விடுதலை செய்து அவருடைய ராஜ்ஜியத்தை அவருக்குக் கொடுத்துவிட்டார். இப்பொழுது அப்பாவும் அவரும் ஆருயிர் நண்பர்களாக இருக்கிறார்கள்.

என் அப்பா என் அபிப்பிராயப்படி இவரை மணந்து கொள்வதற்கு அனுமதி கொடுத்தார். ஆனால் பயன்? இவர் பெயர்கூட தெரியாதபோது இவரைக் கண்டு பிடிப்பதெப்படி? எங்கள் ஒற்றர்களுக்கு இவருடைய அடையாளங்களைச் சொல்லி, அப்படிப்பட்டவரைப் பார்த்தால், உடனே அழைத்துக்கொண்டு வரும்

படி, கட்டளையிட்டேன். பயன்றுப் போய்க்கொண்டிருந்தது.

இது அப்பாவுக்கும் எனக்கும் கவலை யாக இருந்தது. அப்பொழுதுதான் இவரைப் பற்றி முழு விவரத்தையும் தெரிந்து கொள்ளாமல் போனது எவ் வளவு முட்டாள்தனம் என்று எனக்குப் பட்டது.

இதற்கிடையில்—

வருஷங்கள் பல உருண்டோடி மறைந்தன.

ஒருநாள்—

தங்கள் நாட்டில் உலகத்திலில்லாத கோயிலைப் பார்த்துவிட்டு வந்து எங்கள் ஒற்றர்கள் என்னிடம், "நீங்கள் குறிப் பிட்ட அடையாளங்களுள்ள ஒருவரை நாங்கள் மாளவ நாட்டில் பார்த் தோம். அவர்தான் அந்த அற்புதக் கோயிலைக் கட்டியவராம்" என்று சொன் ஞர்கள். உடனே நான் அந்தச் சிற்பி இவராகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணினேன்.

இதற்குள்—

"ஆஸ்தான சிற்பியைப் பேச வைப் போருக்குப் பரிசுகள் வழங்கப்படும்"

என்று தங்களின் அறிக்கையைக் கேட்டு என் எண்ணம் உறுதி பெற்றது. இங்கே வந்தேன் " என்றாள்.

எல்லாவற்றையும் கேட்ட சபையோர் வாயைப் பிளந்தார்கள். மாயன் மகேந்திர பூபதியின் முன்னாள் ஆஸ்தான சிற்பி என்பதை அறிந்ததும் உவகையும் பெருமையும் அடைந்தார்கள்.

பிறகு—

பிறகு என்ன ?—

ஒரு நல்ல நாளில் வானதிக்கும் மாயனுக்கும் எல்லோர் முன்னிலையில் யாரும் கண்டும் கேட்டுமிராதபடி அதி வைபவத்துடன் கலியாணம் நடந்தது.





# அழியாச் சின்னம்

"ஷெஹின்ஷா !... மன்னிக்கவேண்டும்! மக்கள் தங்கள் ஆட்சியைப் பற்றி மன மகிழ்ச்சியுடன் பேசிப் புகழ்ந்தாலும் அவர்களிடையே..." என்று நிறுத்தினார், அபுல்பஜல். சிந்தனைக் கோடுகளால் அவர் முகம் சுண்டிவிட்டிருந்தது.

"பஜல்!... ஏன் தயக்கம்! சொல்ல நினைத்ததை தாராளமாகச் சொல். அச்சம் வேண்டாம்" என்றார், அக்பர் பாதுஷா.

"ஒன்றுமில்லை, மகராஜ்!... செல்வன் ஸலீம் நம் ஆஸ்தான நாட்டியக்காரி அனார்கலியுடன் நட்பு கொண்டிருப்பதாக வதந்தி உலவுகிறது. மேலும் அவளையே மணந்துகொள்ள நினைப்பதாகவும் தெரிகிறது. இது உண்மையானால் - தங்கள் புகழ் - கௌரவம் - எல்லாம் என்ன ஆவது?" என்றார் அபுல்பஜல்.

அக்பரின் முகத்தில் வேதனை சுழியிட்டது. "பஜல்! உண்மையை நானே அறிந்துகொள்ளுகிறேன். கொஞ்சம் பொறு..." என்றார்.

மறுநாள் இரவு—

தர்பாரில் நாட்டியம் நடைபெற இருந்தது. அந்த நாட்டியத்தை அக்பர் சக்கரவர்த்தித் தாமாகவே ஏற்பாடு செய்திருந்தார். அவர் சிம்மாசனத்திற்கு நேர் எதிரில் ஸலீமிற்கு ஆசனத்தை அமர்த்தினார். அந்த ஆசனத்திற்குமேல் - பின்புறச் சுவரில் - நாட்டியக்காரியின் சேஷ்டைகளைத் தெரிந்துகொள்ள - ஒரு நீண்ட முகம் பார்க்கும் கண்ணாடியைப் பொருத்தினார். இந்த ஏற்பாடுகள் அவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

வாத்தியங்கள் முழங்கின. அனார்கலி சபையோரை வந்து வணங்கினாள். அப்பொழுது - விசித்திரமான இந்த ஏற்பாடுகளை ஒருவாறு ஊகித்துத் தெரிந்துகொண்டாள். புத்தி சாதுரியத்துடன் அக்பருக்கு எதிரிலிருந்து நடனமாட ஆரம்பித்தாள்.

அனார்கலியின் நாட்டிய ரசனையில் எல்லோரும் மூழ்கினார்கள்.

நாட்டியம் முடியும் சமயம். அனார்கலி பம்பரம்போல் சுழன்றாள். அவள்

அப்படிச் சுழலும்பொழுது, ஸலீமிற்கு மாதுளைபோன்ற அழகிய அதரங்களின் வழியாக முத்துப் போன்ற பல்வரிசையைக்காட்டிப் புன்னகை பூத்தாள். ஸலீம் களிநடம் புரிந்தான்.

சுழன்றாடும் அந்தச் சித்திரப் பாவையைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அக்பர் இதைக் கண்டு உள்ளம் வெதும்பினார். மனம் பதறினார்.

மொகலாய சாம்ராஜ்ஜியத்தின் முதல் மந்திரி - அபுல்பஜல் - சொன்னது உண்மையாகியது. இனி என்ன செய்வது? செய்ய வேண்டும்!—

அக்பர் சக்கரவர்த்தி ஆழ்ந்து யோசித்து ஒரு முடிவிற்கு வந்தார். ஆருயிர் நண்பர் அபுல் பஜலைக் கொண்டு ஸலீமிற்கு அநேகவிதமாகப் புத்திமதிகளை எடுத்துச் சொன்னார். ஸலீம் கேட்கவில்லை. "மணந்தால் அனார்கலியைத்தான் மணப்பேன்" என்று பிடிவாதித்தான். பலவந்தப் செய்து பயனில்லை என்று பஜல் சும்மா இருந்துவிட்டார்.

ஆனால்—

அக்பர் இந்த விஷயத்தில் அதிகப் பற்றுகொண்டார். பஜலை அனார்கலியிடம் தூது அனுப்பினார்.

அவர் அங்கு, சென்று—

"அனார்கலி!... நீ ஸலீமை மணந்தால் மக்கள் கொதிப்படைவார்கள். ஆட்சி அல்லோல கல்லோலத்தில் ஆழ்ந்துவிடும். வேறு யாரையாவது மணந்துகொள். அக்பரிடம் சொல்லி, ஸலீமை மணந்து அடையநினைக்கும் அவ்வளவு செல்வத்தையும் வாங்கித் தருகிறேன்..." என்று பலவிதமாக அவளைச் சரிகட்ட முயன்றார்.

முடியவில்லை. "மந்திரி!... செல்வத்திற்கு ஆசைப்பட்டு நான் அவரை விரும்பவில்லை. அவர் என் ஜீவன். உள்ளம் கவர்ந்த உயிர். வீண் விவாதம் வேண்டாம். போகலாம்..." என்றாள்.

இதனால்—

கருணாமூர்த்தி என்று பெயர் பெற்ற அக்பர் இந்த விஷயத்தில் கல் நெஞ்சரானார். அனார்கலியைப் பிரித்துவைத்தால், மகன் மனம் மாறுபடலாமென்று நினைத்தார். அவளை லாகூருக்கு அழைத்துக் கொண்டு போனார்.

அங்கு—

அவளுக்குத் தன்னாலான மட்டும் புத்திப் புகட்டினார். அவள் கேட்கவில்லை.

அதன் பலன்—

அனார்கலி கட்டுண்டு நிற்கவைக்கப் பட்டாள். பாதுஷாவின் கட்டளைப்படி கொல்லர்கள் அவளைச் சுற்றிச் செங்கற் சுவர் அமைத்தார்கள்.

முழங்கால்வரை சுவர் எழும்பியது. "இப்பொழுதாவது சொல்! மனசை மாற்றிக்கொள்ளுகிறாயா, இல்லையா?" என்று கேட்டார் அக்பர். "முடியாது" என்றாள் அனார்கலி.

கட்டடம் இடுப்புவரை எழும்பியது. மீண்டும் கேட்டார் அக்பர். முன் அளித்த பதிலையே அளித்தாள் அனார்.

ஒவ்வொரு கல்வரிசைப் பூர்த்தியாகி யதும் அக்பர் கேட்டுக் கொண்டே வந் தார். அந்த நிலையிலாவது அவள் உயிருக் குப் பயந்து சரி என்று சொல்லுவாள் என்று. ஆனால் அவள், "முடியாது - முடி யாது" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொண்டே வந்தாள்.

கழுத்துவரை கம்பீரமாக எழுந்து நின்றது மதில்சுவர். முடிவாகக் கேட் டார் அக்பர். "எந்தப் பிறவியிலும் அவர்தான் என் கணவர்!" என்றாள் அனார்கலி. கடைசியாக அவள் உதடு களில் வறண்ட புன்னகை ஒன்று தவழ்ந்து மிதந்தது.

அடுத்த கணம்—

புருவத்தை நெறித்து சைகை செய்துவிட்டு அக்பர் போய்விட்டார். மற்றும் இரண்டுவரிசைகளை எழுப்பிக் கொல்லர்கள் அதை மூடிவிட்டார்கள்.


இப்படி - அனர்கலி ஜீவசமாதியான வரலாறு பல நாட்களுக்குப் பிறகு ஸலீமிற்கு - இல்லை அப்படி அழைக்கப்பட்ட - ஜஹாங்கீ - ருக்குத் தெரிந்தது.

தெரிந்த அந்தக் கணம்—

அவன் உள்ளத்தில் துன்ப அலைகள் எழுந்து கொந்தளித்தன. கோபம் கொப்பளித்துக் கொதித்தது. கண்கள் சிவந்து உருண்டன.

அதன் பலன்—

அபுல்பஜலைக் கொன்ருன். கலகம் செய்தான். சிம்மாசனத்தைக் கைப்பற்றினுன். அன்பின் அழியாச் சின்னமான அனர்கலியின் பெயரால் மாளிகை ஒன்றைக் கட்டினுன். அதனுல் - அவன் உள்ளம் சாந்தியடையுமா ?





# தங்க ரதம்

ஒரு கிராமத்தில் ஏழைக் கட்டைவெட்டி ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் நல்லவன்.

ஒருநாள்—

கட்டைவெட்டி வீட்டில் இருந்தான். அவனுக்கு உடம்பு சரியில்லை. சாதாரணமாக அவன் வீட்டில் தங்கமாட்டான். காலையில் கட்டைவெட்ட காட்டிற்குப் போவான். மாலை - கையில் கிடைத்த காசுடன் வீடு திரும்புவான் - இது அவன் தினசரி வேலையாக இருந்தது.

கட்டைவெட்டியின் மனைவி கொஞ்சம் முன் கோபக்காரி. எப்பொழுது பார்த்தாலும் சிடுசிடு வென்று விழுவாள். கட்டைவெட்டி வீட்டில் இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. எரிந்துவிழுந்தாள். "இப்பொழுதிலிருந்தே கையில் நாலு காசை, சேர்த்துவைத்துக் கொண்டால் தானே, அடுத்தமாதமாவது நம் பையனுக்குக் கலியாணம் பண்ணலாம். போங்

கள். போய்க் கட்டைவெட்டிக்கொண்டு வாருங்கள்'' என்றாள்.

அவளுடைய இந்த நச்சரிப்பைக் கேட்டு அவன் மனமுடைந்தான். ''இவளுடன் வாழ்வதைவிட எங்கேயாவது குளம் குட்டையில் விழுந்து உயிரை விடுவது மேல்'' என்று கோடாலியை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு ஊருக்கு மேற்கே உள்ள காட்டிற்குப் புறப்பட்டான்.

அந்தக் காட்டில்—

ஒரு ராட்சஸன் இருந்தான். அவன் வருவோர் போவோரைக் கொன்றுகொண்டிருந்தான். ஆகையால் - அந்தக் காட்டில் போக்குவரத்து நின்று எவ்வளவோ காலமாகி விட்டிருந்தது. ஆனால் - இப்பொழுது கட்டைவெட்டி உயிரைத் துரும்பாக நினைத்து, காட்டிற்குள் நுழைந்தான்.

நடுகாட்டில்—

ஒரு பெரிய ஆலமரத்தடியில் - ஒரு ராட்சஸன் பேச்சு மூச்சற்றுப் பிணமாகக் கிடந்தான். இன்னொரு ராட்சஸன் முக்கி முனகிக் கொண்டிருந்தான்.

கட்டைவெட்டியின் மூளை வேகமாக வேலைசெய்ய ஆரம்பித்தது. ஓடிப்

போய் எங்கேயாவது குளம் குட்டை இருக்கிறதா என்று நாலாபக்கங்களிலும் தேடிப் பார்த்தான்.

ஒரு கோடியில்—

தாமரைக் குளம் ஒன்று காணப்பட்டது. அவன் சந்தோஷமடைந்தான். ராட்சஸன் உயிர்பிழைத்தெழுந்ததும் அவனுக்கு விருந்தாகப் போவதை எண்ணிப் பூரித்தான். தாமரை இலையில் தண்ணீர் கொண்டுபோய் ராட்சஸன் உயிரைக் காப்பாற்றினான்.

கொஞ்ச நேரம் கழித்து—

ராட்சஸன் நடந்ததை அறிந்து கட்டை வெட்டியை வாழ்த்தினான். ஆனால்-அவன், "என்னைக் கொன்றுவிடு. உனக்குக் கோடி புண்ணியமுண்டு..." என்று மன்றாடினான். அவன் கண்களில் கண்ணீர் மல்கியது.

ராட்சஸன் மனம் குழைந்தான். "என்னைக் காப்பாற்றிய உன்னை எப்படிக் கொல்வது? நீயே சொல், நியாயமா?" என்றான்.

"நியாயமில்லை, தான்! உள்ளம் ஒடிந்து விட்டபிறகு அதைப்பற்றி யோசிக்க என்ன வேண்டி இருக்கிறது? தற்கொலை செய்துகொள்ள மனமில்லாமல் உனக்கு

இரையாக வந்தேன். என்னைக்கொன்று விடு" என்றான். ராட்சஸன் அவனைத் தேற்றினான்.

"எனக்கு மட்டும் பையனுக்குக் கலியாணம் பண்ணிப் பார்க்கவேண்டுமென்ற ஆசையில்லையா, என்ன? காலம் வந்தால் தன்னால் நடக்கிறது! அதற்கு என்ன அவசரம்? இன்று கொஞ்சநேரம் நிம்மதியோடு வீட்டில் இருக்கலாமென்றால், அது என் மனைவிக்குப் பிடிக்கவில்லை. போ, போ, என்று விரட்டுகிறாள். இந்தமாதிரி ஒரு நாளா, இரண்டு நாளா, ஒவ்வொரு நாளும் - ஏதாவது ஒரு சச்சரவு - என்றால் எப்படி? பையன் சும்மா இருந்தாலும் பரவாயில்லை. ஏதோ கட்டைவெட்டி அவனும் சம்பாதிக்கிறான். இன்றுகாலை கூடச் சுள்ளிப் பொறுக்கப் போயிருக்கிறான்" என்றான்.

ராட்சஸன் அவனைச் சமாதானப் படுத்தினான். வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் உபசரித்தான். பெண்ணை அறிமுகப்படுத்தினான். "இவளை மணந்து கொள்ளவேண்டுமென்றுதான் இறந்து போன அந்த ராட்சஸன் கேட்டான். நான் மறுத்தேன். என்னைக் கொன்று இவளைக் கலியாணம் செய்துகொள்ள நினைத்தான். சண்டையிட்டான். மாண்டான். மடையன்!" என்றான். பளிச்

சென்று கட்டைவெட்டிக்கு ஆலமரத்தடியில் கண்டகாட்சி நினைவு வந்தது.

கடைசியில்—

ராட்சஸன் கட்டைவெட்டிக்கு விடைகொடுத்தான். "இன்று முதல் நீ என் நண்பன்! இனி நீ இந்தக் காட்டிற்குத் தாராளமாக வந்து, கட்டை வெட்டிக் கொண்டு போ. உனக்கு ஒருவித ஆபத்தும் நேராது. முதலில் உன் மகனுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு இங்கு வா. உனக்கு வேண்டிய பணம் தருகிறேன். கவலை வேண்டாம்" என்றான். கட்டைவெட்டி அவனை ஏறிட்டுப் பார்த்தான். அவன் முகத்தில் நன்றி நிறைந்திருந்தது.

அன்றிலிருந்து—

கட்டைவெட்டி, மேற்கு மலைக் காட்டுக் கட்டையைக் காசாக்க ஆரம்பித்தான்.

நாட்கள் உருண்டன—

மகனுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, கட்டைவெட்டி ராட்சஸன் குகையை அடைந்தான்.

அப்பொழுது—

ராட்சஸன் குகையில் இருந்தான். கட்டை வெட்டியைப் பார்த்ததும் அவன்

உள்ளத்தில் பளிச்சென்று ஒரு திட்டம் தோன்றி மின்னலிட்டது. நன்றியை மறந்தான். அவனை ருசிபார்க்க எண்ணினான். கொன்று பசிதீர்த்துக்கொண்டான்.

இரண்டுநாள் கழித்து—

கட்டைவெட்டியைக் காணுமல் அவன் மனைவியும் மகனும் சோகத்தின் சுமை தாங்கமாட்டாமல் அழுது புரண்டு கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது—

அகால மரணமடைந்த கட்டைவெட்டியின் ஆவி அவர்கள் முன் தோன்றியது. "ஏன் அழுகிறீர்கள்? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வரப்போவதில்லை. அழாதீர்கள்!..." என்று அன்று நடந்த சம்பவத்தைச் சொல்லி, அவர்களைத் தேற்றியது.

ஆனால்—

அவர்கள் விம்மல் அதிகமாகியது. கட்டைவெட்டியை - ஆவியை - பார்க்க முடியாததற்கு வருந்தினார்கள். ஆவி குழறியது.

கடைசியில்—

ஆவி மகனை அழைத்துக்கொண்டு ராட்சஸன் குகையை அடைந்தது.

அங்கு—

பொக்கிஷ அறையில் வேண்டிய மட்டும் பொன்னையும் பொருளையும் எடுத்துக் கொள்ளச்சொன்னது.

கட்டைவெட்டியின் மகன் ஆச்சரிய மடைந்தான். தலையில் கட்டிக்கொண் டிருந்த துணியை அவிழ்த்து வேண்டிய மட்டும் மணிகளையும் மாணிக்கங்களையும் மூட்டை கட்டிக்கொண்டான். குகையை விட்டு வெளியேறும்பொழுது - ஒரு மர வேர் தடுக்கி, கீழே விழுந்து விட்டான். அவ்வளவுதான்!

ராட்சஸன் தூக்கம் கலைந்து எழுந்து வந்தான். ஆனால் - அவனைக் கொல்ல முடியாமல் ஏமாற்றமடைந்தான். ஏன்?—

அந்தச் சமயம்—

ஆவி மகனைச் செல்லமாகக் கோபித்துக்கொண்டது. "பார்த்துவரக் கூடாது? ராட்சஸன் பார்த்துவிட்டால் உன் கதி என்ன ஆவது?" என்றது.

ராட்சஸன் கட்டைவெட்டியின் குரலைக் கேட்டு அதிர்ச்சி யடைந்தான். அவனை அநியாயமாகக் கொன்றதை நினைத்து மனம் வருந்தினான். மகன்செய்த

பிழையை மன்னித்து - "நானே உனக்குப் பொன்னும் மணியும் தர நினைத்தேன். நீயே வந்து எடுத்துக் கொண்டாய். இனி நீ இந்தக் காட்டிற்கு வராதே! ஜாக்கிரதை!" என்றான். பையன் "சரி" என்றான்.

வழியில்—

ஆவியின் உள்ளம் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தது. "மனைவிக்கும் மகனுக்கும் ஒன்றும் வைக்காமல் போய்விட்டான், பாவி என்று சுடுசொல் கேளாமல் என் ஆத்மா சாந்தியடைந்துவிட்டது. இனி எனக்கு என்ன வேண்டும்" என்று பெருமியது.

" நம் வீடு கூரைவீடு. பதுக்கிவைக்கப் போதுமான பாதுகாப்பு இல்லை. ஆகையால், உன் கலியாணம் முடியும் மட்டும் இந்த மூட்டையை உன் மாமனிடம் கொடுத்துவை" என்றது. மகன் ஒப்புக்கொண்டான். ஆவி விடைபெற்றுக்கொண்டது.

கட்டைவெட்டியின் மாமன் நடந்தவைகளைக் கேட்டு ஒரு கணம் அவன் நம்பவில்லை. மறுகணம் நவரத்தின மூட்டையைக் கண்டு அவனால் நம்பாமல் இருக்க முடியவில்லை. நம்பினான்! மேலும் அதைக் கைப்பற்றிவிடக் கருதினான்.

சூழ்ச்சிப் பந்தல் விரித்தான் : "ராட்சஸனிடம், பதுமைப் பாவை என்று ஒரு வைரவிக்கிரகம் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளுகிறார்களே, நீ அதைக் குகையில் பார்த்தாயா?" என்று கேட்டான்.

"பார்த்தேன்!" என்றான் கட்டைவெட்டியின் மகன்.

மாமன் முகத்தில் மகிழ்ச்சிப் பொங்கியது. "அதை நீ எப்படியாகிலும் கொண்டு வந்துகொடுத்துவிடு. உனக்கு என் பெண்ணைக் கொடுத்துக் கலியாணம் செய்து வைக்கிறேன்..." என்றான்.

பையன் "சரி" என்றான். முன்பு பெண்ணைக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னவன் இப்பொழுது கொடுக்கிறேன் என்றதும் எல்லாம் அந்த நவரத்தின மூட்டையின் மகிமைதான் என்று அவன் தெரிந்து கொண்டான். மறு கணம் - அவனை யறியாமல் அவன் உதடுகளில் நமட்டுச் சிரிப்பு ஒன்று தோன்றி மறைந்தது.

மறுநாள்—

கட்டைவெட்டியின் மகன் நடந்ததை ஒன்றுவிடாமல் தாயிடம் சொன்னான். தாய் அண்ணன் இட்ட கட்டளையைக் கேட்டு அரண்டாள். மகனைக் குகைக்குப் போகவேண்டாமென்று தடுத்

தாள். அவன் கேட்கவில்லை. எப்படியும் அதைக்கொண்டுவந்து கொடுத்து மாமன் மகளைக் கட்டிக்கொள்ள உறுதிகொண்டான்.

அன்றிரவு—

அதிர்ஷ்டவசமாக ராட்சஸன் குகையில் இல்லை. எங்கேயோ சென்றுவிட்டிருந்தான். கட்டைவெட்டியின் மகன் மகிழ்ச்சியடைந்தான். பதுமைப் பாவையைக் கொண்டுவந்து மாமனிடம் கொடுத்தான்.

மேலும்—

"மாமா! அங்கு ஒரு அழகான தங்க ரதத்தைப் பார்த்தேன். எடுத்துக் கொண்டு வருவதற்குள் யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்டது. ஓடிவந்து விட்டேன்" என்றான்.

மாமனின் ஆசை அளவு கடந்தது. "அதையும் நீ எடுத்துக்கொண்டு வந்தால்தான் பெண் கொடுப்பேன்" என்று மிரட்டினான். இந்தத் தடவை அவன் உயிருடன் திரும்பிவந்தால் - சொன்னபடி பெண்ணைக் கொடுத்து வீட்டுடன் வைத்துக்கொள்ளுவது - வராவிட்டால் நவரத்தின மூட்டையையும் பதுமையையும் அபகரித்துவிடுவது - ஒருவேளை தங்கை

வந்து கேட்டால் நடந்தவைகளைப் பொய் என்று கற்பித்து, அவளைப் பைத்திய மாக்கி விடுவது - இப்படி அவன் முடிவு கட்டினான்.

அன்றிரவு—

கட்டைவெட்டியின் மகன் குகையை அடைந்தான்.

அங்கு—

தங்க ரதத்தை எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

அது சமயம்—

ராட்சஸன் அவனைப் பார்த்துவிட்டான். அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "ஏமாந்திருக்கும் சமயம் பார்த்து, பதுமைப் பாவையைத் திருடிவிட்டு, இப்பொழுது தங்க ரதத்தை எடுத்துக்கொண்டு போகவா வந்தாய்? இரு! உன்னை என்ன செய்கிறேன் பார்..." என்று அவனைப் பிடித்து மகளிடம் கொடுத்து, சமைக்கச் சொன்னான்.

ராட்சஸன் மகள் நல்லவள். பிறருக்கு உதவிசெய்யவேண்டுமென்ற பெருங் குணம் வாய்ந்தவள். அவள் கட்டைவெட்டியின் மகனின் வரலாற்றைக் கேட்டு, கண்ணீர் உதிர்த்தாள். எப்படியும் அவனைக் காப்பாற்ற எண்ணினாள்.

மறுநாள் காலை—

கட்டைவெட்டியின் மகன் தங்க ரதத்துடன் மாமன் வீட்டை அடைந்தான். மாமன் மனம் குளிர்ந்தான். "ஒரு நல்ல நாள் பார்த்து உனக்கும் என் மகளுக்கும் கலியாணம் செய்துவைக்கிறேன். அந்த, தங்க ரதத்தைக் கொடு" என்றான்.

அவன் கொடுக்கவில்லை. "மன்னிக்கவும். நான் உங்கள் மகளைக் கலியாணம் பண்ணிக்கொள்ளமுடியாது. என் உயிரைக் காப்பாற்றி, என்னுடன் வாழத் தயாராக இருக்கும் - மானிட உருவில் இருக்கும் ராட்சசன் மகளை - தாயற்ற அந்தப் பெண்ணை - கட்டிக்கொள்ளப் போகிறேன். இதைச் சொல்லிவிட்டுப் போகவே அவளை வீட்டில் விட்டுவிட்டு வந்துகொண்டிருக்கிறேன். தயவுசெய்து நவரத்தின மூட்டையைக் கொடுங்கள். நீங்கள் இத்தனை நாள் அதைக் காப்பாற்றியதற்கு வைரப் பதுமைப் பாவையை எடுத்துக்கொள்ளுங்கள்..." என்றான்.

மாமன் மூளை விசித்திரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. "உன் விருப்பப்படியே அவளை மணந்துகொள். எனக்கொரு ஆட்சேபணையும் இல்லை. ஆனால் - கொடுத்தேன் - கொடு - என்றுமட்டும் நவரத்தின மூட்டையைக் கேட்காதே! கேட்டால், நீ அரண்மனையில் திருடிவந்து

பதுக்கிவைக்கச் சொன்னதாகச் சொல்லி, உன் மானத்தை வாங்கிவிடுவேன். ஜாக்கிரதை" என்றான்.

கட்டைவெட்டியின் மகன் கோபித்துக்கொள்ளவில்லை. "போகட்டும், நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

இதற்கிடையில்—

ராட்சஸன் செல்வமகளேயும் கட்டைவெட்டியின் மகனேயும் காணுமல் அலேந்தான், அலுத்தான்.

கடைசியில்—

கட்டைவெட்டியின் வீட்டிற்குப் போய்ப் பார்த்துவிடுவது என்று புறப்பட்டான்.

ராட்சஸன் கட்டை வெட்டியின் குடிசையை நெருங்கும்பொழுது - அவன் வீட்டிலிருந்து மேள முழக்கம் காற்றில் மிதந்துவந்து அவன் காதுகளில் ரீங்காரம் செய்தது. அவன் மூளே குழம்பியது. கோபம் தணிந்தது. சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தான். "நமக்கு ஏற்ற மாப்பிள்ளே இவன்தான்! ஏனென்றல் - குகைக்குத் தன்னந்தனியாக இரவில் வரவேண்டுமென்றல் அவனுக்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டும். பாவி! நான் - நண்பனேக் கொன்ற பாவத்

திற்கு அவன் மகனுக்குப் பெண்ணைக் கொடுத்தால், பரிகார மாகவாவது இருக்கும்'' என்று எண்ணினான். உள்ளே சென்று தம்பதிகளை மனமார வாழ்த்தினான். மணமக்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

ஆனால்—

மாமன் ராட்சஸனைக் கண்டதும் திடுக்கிட்டான். செய்த பிழைகள் அவன் கண்முன் பளிச்சிட்டு நர்த்தனமாடின. உடனே ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந்து அபகரித்துக்கொண்ட அத்தனையும் கொண்டுவந்து, எல்லோர் முன்னிலையில் மருமகனுக்குக் கொடுத்தான்.

